**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.301/2017**

Date: 18.10.2023.

PW–3 சாட்சி இன்று மீண்டும் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**A1 and A2 Present.**

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்து போன எனது அண்ணன் குப்புசாமியின் வீட்டிற்கு பின்புறம் உள்ள நிலம் பிரிக்கப்படாத நிலம். அந்த நிலம் காளியம்மன் கோயிலுக்கு பின்புறம் இருக்கிறது என்றால் சரிதான். அந்த சமயத்தில் சோளம் விதைக்கப்பட்டிருந்த நிலமானது குப்புசாமியின் பாக நிலமாகும். அந்த நிலத்தை பொறுத்து பிரச்சினை இல்லை. பிரிக்காத காட்டை பொறுத்துதான் 1ம் எதிரி பிரச்சினை செய்தார். குப்புசாமியின் வீட்டிலிருந்து மேடு ஏறித்தான் 1ம் எதிரியின் வீட்டிற்கு போக முடியும் என்றால் சரிதான்.

நான் சென்று பார்த்தபோது மாணிக்கம் என்பவரது நிலத்தில்தான் குப்புசாமியின் பிரேதம் கிடந்தது. அந்த இடத்தில் இருந்து மேட்டில் சுமார் 300 அடி ஏறி சென்றால்தான் 1ம் எதிரியின் வீட்டிற்கு போக முடியும். சம்பவமானது 1ம் எதிரியின் வீட்டருகே நடந்து பிரேதமானது உருண்டு கீழே வந்துவிட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Sd/- **G. Sri Rama Jeyam**
III Additional District Judge,
Salem.